புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • செப்டம்பர் 19, 2024 • புரட்சி 24 • முழக்கம் 37 • விலை ரூ.3.00

## சேலத்தில் பெரியார் முகமூடியுடன் தோழர்கள் அணிவகுப்பு

# தமிழ்நாடு முழுவதும் எழுச்சியுடன் நடந்து முடிந்த பெரியார் பிறந்தநாள் விழா!

**திண்டுக்கல் :** திண்டுக்கல் மாவட்டக் கழக சார்பில் தந்தை பெரியாரின் 146வது பிறந்தநாள் விழா பழனியில் நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் பழனியில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து பழனி ஒன்றியத்துக்கு உட்பட்ட அ.கலையம்புத்தூர், அழகாபுரி, மானூர், புது ஆயக்குடி, பழைய ஆயக்குடி, பச்சளநாயக்கன்பட்டி உள்ளிட்ட இடங்களில் பெயர் பலகையைக் கழகத் தலைவர் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். கழகத் தலைவரை அப்பகுதியைச் சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் உற்சாகமாக வரவேற்றனர்.

இந்நிகழ்வில் மாவட்டத்தலைவர் மருதமூர்த்தி, மாவட்டச் செயலாளர் மாக்சிம் கார்க்கி, மாவட்ட அமைப்பாளர் ராஜா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாச்சிமுத்து, துணை அமைப்பாளர் சங்கர், பழனி ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன், ஒன்றிய அமைப்பாளர் பெரியார், ஒட்டன்சத்திரம் ஒன்றியத் தலைவர் கபாலி, ஒன்றிய அமைப்பாளர் சக்திவேல், ஆயக்குடி பேரூர் அமைப்பாளர் ஜெயசங்கர், தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர் ஆயுதன் மற்றும் கழகத் தோழர்கள் உஷாராணி, ஆதித்யா, சுரேகா, முத்துராஜ், சஞ்சய், தினேஷ் சந்தோஷ் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

**சென்னை:** தந்தை பெரியார் 146வது பிறந்தநாள் விழா சென்னை மாவட்டக் கழக சார்பில் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.

காலை 8:30 மணியளவில் இராயப்பேட்டை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து தோழர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

அதன் பின்னர் சேத்துப்பட்டு, சிம்சன், தியாகராயர் நகர், தரமணி, எம்.ஜி.ஆர் நகர், மயிலாப்பூர், சைதாப்பேட்டை, நங்கநல்லூர் உள்ளிட்டப் பகுதிகளில் வாகனப் பேரணியாகச் சென்று பெரியார் சிலைகளுக்கு மாலை அணிவித்து முழக்கங்கள் எழுப்பி மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி, கழக இணையதளப் பொறுப்பாளர் விஜயகுமார், மாவட்ட நிர்வாகிகள் சேத்துப்பட்டு இராசேந்திரன், வேழவேந்தன், அ.வ.வேலு, எட்வின் பிரபாகரன், தட்சிணாமூர்த்தி மற்றும் கழக இளைஞரணி - தமிழ்நாடு மாணவர் கழகம் மற்றும் திராவிடர் இயக்க உணர்வாளர்கள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

விழாவில் கலந்து கொண்ட தோழர்கள் அனைவருக்கும் காலை மற்றும் மதியம் மாட்டுக்கறி உணவு பரிமாறப்பட்டது.

**சேலம் கிழக்கு :** சேலம் கிழக்கு மாவட்டக் கழக தந்தை பெரியாரின் 146வது பிறந்தநாள் விழா வெகு விமரிசையாக நடைபெற்றது.

சேலம் கிழக்கு மாவட்டக் கழகத் தலைவர் சக்திவேல் தலைமையில் சேலம் கோட்டை மைதானம் முதல் மாவட்டச் ஆட்சியர் அலுவலகம் வரையில் பெரியார் முகமூடி அணிந்துகொண்டு நூற்றுக்கும் மேற்பட்டோர் பேரணியாக வந்து அங்குள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

மேலும் பிரபாத், தாதகாப்பட்டி, அன்னதானப்பட்டி, சிவசக்தி நகர், மூணாங்கரடு, உத்திரப்பன் நகர், மணியனூர், ஜங்சன், கே.ஆர். தோப்பூர், பவளத்தானூர், கோனேரிப்பட்டி, கறிக்கடை பஸ் ஸ்டாப், இளம்பிள்ளை, பெத்தாம்பட்டி, முருங்கபட்டி, நாயக்கன்பட்டி, ஆத்தூர், ஏற்காடு உள்ளிட்ட இடங்களில் கொடியேற்று விழா மற்றும் படத்திறப்பு விழா எழுச்சியுடன் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மாவட்டச் செயலாளர் டேவிட், மாவட்ட அமைப்பாளர் பெருமாள், மாவட்ட அமைப்பாளர் முத்து மாணிக்கம், மாநகரத் தலைவர் பாலு, மாநகரச் செயலாளர் ஆனந்தி, மாநகர் அமைப்பாளர் தேவராஜ், சேலம் மாவட்ட இளைஞரணித் தலைவர் தேவபிரகாஷ், சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வெற்றிமுருகன், சேலம் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தங்கதுரை, சேலம் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திவ்யா, ஏற்காடு ஒன்றியச் செயலாளர் கார்த்திக், இளம்பிள்ளை நகரத் தலைவர் ரமேஷ், இளம்பிள்ளை நகரச் செயலாளர் மோகன்ராஜ் மற்றும் குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**தருமபுரி:** தருமபுரி மாவட்டக் கழக சார்பில் தந்தை பெரியாரின் 146வது பிறந்தநாளை முன்னிட்டு பண்ட அள்ளி, பென்னாகரம் மற்றும் தருமபுரி ஆகிய இடங்களில் அமைந்துள்ள பெரியார் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இந்த நிகழ்வில் மாவட்டத் தலைவர் வெ.வேணுகோபால், மாவட்டச் செயலாளர் கு.நாகராசன், மாவட்ட அமைப்பாளர் மா.பரமசிவம், ஒன்றியச் செயலாளர்கள் அசோக்குமார், இராமதாசு, நஞ்சப்பன், பெரியார் பெருந்தொண்டர் கடைமடை மு.மாதையன், வி.தேவன், ம.தி.மு.க கோவிந்தராசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.






















திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் தந்தை பெரியாரின் 146வது பிறந்தநாள் விழா தமிழ்நாடு முழுவதும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதன் படத்தொகுப்பு

## தலையங்கம்

# இது வேத காலம் அல்ல!

தி.மு.க.வின் பவள விழா பொதுக்கூட்டத்தில் பேசிய தி.மு.க. பொதுச்செயலாளர் துரைமுருகன் பார்ப்பன ஆதிக்கம் தொடர்ந்து கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். அன்று இராஜாஜி இந்தியைத் திணித்தார். இப்போது இருமொழிக் கொள்கையை நீக்க வேண்டுமென்று என்று சொல்லுகிறார்கள். அதே ஜாதிதான் மறைமுகமாக பல காரியங்களைத் தொடர்ந்து செய்கிறது. அண்மையில் ஒன்றிய அரசு இந்தியாவின் சரித்திரத்தை மாற்றி எழுதுவதற்காக குழு ஒன்றை அமைத்துள்ளது. அதில் 17 பேர் இடம்பெற்றுள்ளனர். 3பேர் அரசு அதிகாரிகள், மற்ற 14 பேரும் (பிராமணர்கள்) அதில் ஒருவர் கனடா நாட்டில் வாழும் பிராமணச் சங்கத் தலைவர். வெளிநாட்டிலிருந்து ஆட்களைத் தேடிப்பிடித்திருக்கிறார்கள். ஹரப்பா, மொகஞ்சதாரோ நாகரீகம் திராவிட நாகரீகம்தான். ஆனால் ஆரிய நாகரீகம் அதாவது சரஸ்வதி நாகரீகம் என்று அந்தக் கமிட்டி கூறுகிறது. அந்த இனத்தின் பகை இன்றும் தொடர்கிறது. அது தொடர்ந்தால் திமுக தன் வீரியத்தைக் காட்டும் என்று துரைமுருகன் பேசியுள்ளார்.

உளம் திறந்து உண்மைகளை வெளிப்படுத்திய அமைச்சர் துரைமுருகன் அவர்களைப் பாராட்ட வேண்டும். ஒன்றிய ஆட்சி அதிகார மையம் பார்ப்பனர்களால் சூழப்பட்டிருக்கிறது. இந்துத்துவாவின் உள்ளடக்கமே பார்ப்பனியத்தை அரசு அதிகாரக் கட்டமைப்பாக மாற்றுவது தான். அதன் காரணமாகத்தான் இந்தியைத் தமிழர்கள் மீது திணிக்கிறார்கள். இந்தத் திணிப்பு மொழித்திணிப்பு மட்டுமல்ல, பார்ப்பனியப் பண்பாட்டுத் திணிப்பு என்ற கண்ணோட்டத்தில் தான் பெரியார் இந்தியை எதிர்த்தார். இந்தி வழியாக சமஸ்கிருதப் பார்ப்பனியம் பண்பாட்டில் ஊடுருவி விடும் என்று பெரியார் எச்சரித்தார்.

தமிழ்நாட்டுக் கோயில்களில் குடமுழுக்கில் வைதீகத் திருமணங்களில், பண்டிகைகளில் தமிழர் வீடுகளில் சமஸ்கிருதம் கோலோச்சுகிறது. அதன் வழியாகப் பார்ப்பனர்கள் தமிழர்களின் பண்பாட்டு வாழ்வியலைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் முடக்கியுள்ளனர். தீர்ப்புகள் வழங்கும் உச்சநீதிமன்ற - உயர்நீதிமன்ற நீதிபதிகள் தங்களுடைய வழக்கு எல்லைகளையும் மீறி சனாதனத்தையும் பழமைப் பிற்போக்குக் கருத்துக்களையும் தீர்ப்புகளில் எழுதிக்கொண்டு இருக்கிறார்கள்.

பார்ப்பன ஆதிக்கத்திற்குச் சான்றாக இப்போது ஒரு அறிவிப்பு வெளிவந்திருக்கிறது. வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களில் ஒப்பந்த அடிப்படையில் தமிழ் ஆசிரியர்களை நியமிக்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தி, சமஸ்கிருதம் தெரிந்த தமிழ் ஆசிரியர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியுமென்று கூறுகிறது ஒன்றியரசின் அறிவிப்பு. இதன் நோக்கம் என்ன? தமிழ், ஆங்கிலம் என்ற தமிழ்நாட்டின் இருமொழிக் கொள்கையை ஏற்க மறுப்பது தானே?. அயல்நாட்டுத் தூதரகங்களில் பணிபுரிய ஆங்கிலம் கூட தெரிந்திருந்திருக்க வேண்டியதில்லை சமஸ்கிருதம் தெரிந்தால் போதும் என்ற கொள்கை பச்சைப் பார்ப்பனியமல்லவா? என்று கேட்கிறோம். அயல்நாட்டுத் தூதரகங்கள் பார்ப்பனிய ஆதிக்கத்தால் நிரம்பி வழிகின்றன. எனவே சமஸ்கிருதம் தேவை என்ற நிபந்தனை வழியாக தமிழ் தெரியும் பார்ப்பனர்களைத் தேர்வு செய்யும் சூழ்ச்சிதான் இதில் அடங்கியிருக்கிறது. இது பாமரர்களுக்குக் கூட புரியும்.

ஆரியர்களை இந்தியாவின் பூர்வீகக் குடிகளாக நிலைநிறுத்த பார்ப்பனர்கள் துடிக்கிறார்கள். சிந்துவெளி நாகரீகம் திராவிட நாகரீகம் என்பது உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாகும். அங்கே கண்டெடுக்கப்பட்ட எழுத்துகள் திராவிட மொழிச் சார்ந்தவை என்று பல ஆய்வாளர்கள் அறிவித்துவிட்டனர். ஹன்டர், காட், ஹீராஸ் பாதிரியார், மார்ஷல், போன்ற பன்னாட்டு ஆய்வாளர்களும் பின்லாந்து அறிஞர் அஸ்கோ பர்ப்பர்போல மற்றும் நோரசாவ் தலைமையில் ஆய்வு செய்த இரஷ்ய அறிஞர்கள் குழுவும் இதை உறுதி செய்துள்ளது. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட முத்திரை எழுத்துக்கள் திராவிட மொழி சார்ந்தவை என உறுதிப்படுத்தப்படுத்தியுள்ளது. இதற்காக தமிழ்நாட்டைச் சார்ந்த பத்திரிக்கையாளரும் ஆய்வாளருமான ஐராவதம் மகாதேவன் ஏழாண்டு காலம் கடுமையாக உழைத்து இந்தக் கருத்தை உறுதி செய்துள்ளார். அவர் பிறப்பால் ஒரு பார்ப்பனர் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். 1977-இல் அன்றைய ஒன்றிய அரசு ஐராவதம் மகாதேவன் ஆய்வை மிகச்சிறந்த ஆய்வாக ஏற்று அரசின் தொல்லியல் துறையே அதை நூலாக வெளியிட்டது. எல்லாவற்றையும் விட தமிழ்நாட்டில் சிவகங்கை மாவட்டத்தில் கீழடியில் நடந்த அகழ்வாராய்ச்சிகள், தமிழர் நாகரீகம் திராவிடர் நாகரீகம் இரண்டும் ஒத்தவையாக இருந்ததை உறுதிப்படுத்தியிருப்பதோடு தமிழர்கள் மதம் சாராத வாழ்க்கையை வாழ்ந்திருக்கிறார்கள் என்பதையும் நிலைநிறுத்தி இருக்கிறது.

இதற்கு மாறாக இந்துத்துவப் பார்ப்பனியம் சரஸ்வதி நாகரீகம் என்ற ஒன்றை இப்போது பேசிக்கொண்டிருக்கிறது. வேதங்களில் குறிப்பிடப்படுகிற சரஸ்வதி என்ற ஒரு ஆறு இப்போது பூமிக்கு அடியில் ஓடிக்கொண்டிருக்கிறது கண்களுக்குத் தெரியவில்லை என்ற வரலாற்றுப் புரட்டுக்களைக் கட்டமைத்து வருகிறார்கள். இதைப்பற்றி ஆய்வு செய்வதற்காக பல கோடி ரூபாய் நிதியை ஒதுக்கினார்கள். அரியானாவில் 2015-இல் அம்மாநில அரசு 50 கோடி ரூபாய் இதற்காக ஒதுக்கியது. ஆனால் சரஸ்வதி இன்னும் மீட்டுக்கொண்டு வர முடியவில்லை. இந்த முயற்சிகளின் பின்னால் உள்ள பார்ப்பன அரசியல், போலி அறிவியல் மூடநம்பிக்கைகளை SEARCHING FOR SARASWATHY என்ற ஆவணப்படம் அம்பலப்படுத்தியது. அமெரிக்காவின் நியூயார்க் டைம்ஸ் என்ற பத்திரிக்கையின் மிகப் பிரபலமான ‘ஒபன் டாக்குமென்ரிஸ்’ என்ற ஆவணப் பிரிவு தயாரித்த ஆவணப்படம் இது பாப்ரி மசுதி இருந்த இடத்தில்தான் இராமன் பிறந்தான் என்பதற்காக போலி வரலாறுகளை உருவாக்கியவர்கள் தான், இப்போது வரலாறுகளையும் மாற்றி எழுதத் துடிக்கிறார்கள்.

திராவிட - ஆரியப் போராட்டங்கள் இப்போது வெவ்வேறு வடிவங்களில் தொடர்கின்றன. குருதிக் கலப்பு ஏற்பட்டுள்ளது உண்மைதான் என்றாலும் பண்பாட்டுக் கலப்பு உருவாகாமல் பார்ப்பனர்கள் தங்களைத் தனிமைப்படுத்தி சமூகத்தின் ஆதிக்கச் சக்திகளாக அடையாளப்படுத்துவது ஏன் என்று பெரியார் கேட்டார். இப்போது வரலாற்றை மாற்றி எழுதத் துடிப்பதும் கூட அவர்களின் பார்ப்பனிய மேலாண்மையை நிலை நிறுத்திக்கொள்வதற்காகத்தான். இது வேத காலம் இல்லை என்பதைப் பார்ப்பனர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

# வினா விடை

*கூட்டணி குறித்து மேலிடம் தான் முடிவு செய்யும்.*
*- தமிழிசை*

அதாவது, தமிழிசை - அண்ணாமலை கூட்டணியா மேடம்?

*ஆதி கேசவன் காப்பாற்றுவான் என்று உத்திரகாண்ட் சென்றோம். ஆனால் தமிழ்நாடு முதல்வரும், இராணுவமும் தான் எங்களைக் காப்பாற்றினார்கள்.*
*- நிலச்சரிவில் இருந்து மீண்ட பக்தர்கள் பேட்டி!*

ஆதி கேசவன் தான் முதல்வர் உருவில் வந்து காப்பாற்றினார் என்று சொல்லாதவரை மகிழ்ச்சி..

*மகா விஷ்ணுவின் முன் ஜென்ம பேச்சு; சென்னை அதிகாரி தஞ்சைக்கு மாற்றம். - செய்தி*

மகா விஷ்ணு கூறிய பூர்வ ஜென்ம பாவம், அதிகாரியையும் பிடிச்சு ஆட்டுது போல..

*விநாயகர் பூஜை பண்டிகையல்ல; அது தேச பக்தியுடன் தொடர்பு கொண்டது. - - மோடி*

வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் தடியடி வாங்கியவன் விநாயகன் தான்.

*கர்நாடக அரசு விநாயகனைக் கைது செய்த போது போலீஸ் வண்டியில் ஏற்றியது இந்துக்களைக் கொந்தளிக்கச் செய்தது. - மோடி*

அதே இந்துக்கள் தான் விநாயகனை டிராக்டரில் ஏற்றி கிரேன்களைக் கொண்டு கடலில் வீசுகிறார்கள் மோடி ஜீ.



## நல்லாசிரியர் விருது பெற்ற வேலூர் கழகத் தோழர்

தோழர் ‘தெருவிளக்கு’ கோபிநாத் 2024 ஆம் ஆண்டிற்கான தேசிய நல்லாசிரியர் விருதுக்காக தமிழ்நாட்டிலிருந்து தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவர் தமிழ்நாடு அறிவியல் மன்றத்தின் ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டத் தலைவராக தற்போது பணியாற்றிவருகிறார். மேலும் வேலூர் மாவட்டத்தில் கிராமப் பகுதிகளில் இரவு நேரப் பள்ளிகளை நடத்தி அவை பரவுவதற்கான தொடக்க புள்ளியாகச் செயல்பட்டவர்.

தமிழ்நாடு அரசு பாடநூல் நிறுவனத்திலிருந்து வெளிவரும் பாடப் புத்தகங்களில் உள்ள ஓவியங்களை வரையும் பணியைச் செய்தவர். பள்ளி மாணவர்களிடையே நாடகங்களைப் பயிற்றுவிக்கும் பயிற்றுநர். கிராமியக் கலைகளில் வித்தகராகவும் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## திருச்சியில் குடும்ப விழா!

திருச்சி: மணப்பாறையைச் சேர்ந்த கழகத் தோழர் பாலசுப்பிரமணியம் - சித்ரா இல்ல குடும்ப விழா 08.09.2024 அன்று அவரது நடுப்பட்டி கிராமத்தில் நடைபெற்றது. இதில் பெரியாரியலாளர் சிற்பி இராசனின் மந்திரமா? தந்திரமா? பகுத்தறிவு நிகழ்ச்சி நடைபெற்றது. மேலும் விழா மகிழ்வாக பாலசுப்பிரமணியம் - சித்ரா ஆகியோர், கழக ஏடான புரட்சிப் பெரியார் முழக்கம் இதழுக்கு ரூ.6000/- வளர்ச்சி நிதியாக வழங்கினார்கள்.

இந்த விழாவில் கழகத் தோழர்கள் மனோகரன், டார்வின் தாசன், குமரேசன், தனபால் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பெரியாரின் உருக்கமான கட்டுரை (2)

# விலக நினைக்கிறேன்; விலகுவதால் என்ன இலாபம்?

“ஆரம்பத்திலிருந்து இதுவரை முன்னாற் குறிப்பிட்ட கொள்கைகளில், அது ஒரு சிறிதும் தவறாமல் ஏற்றுக்கொண்டபடி நடந்து வந்திருக்கிறது என்பதையும் மெய்ப்பித்து விட்டோம். ஆகவே, “குடிஅரசு” குறைந்தது ஒரு பதினாயிரம் பிரதிகளாவது அச்சிட்டு வெளியாக வேண்டும் என்கிற ஆசை நமக்கு இருந்தாலும் இந்நாலாயிரத்து ஐந்நூறைக் கொண்டு நான் சந்தோஷமடைகிறேனே தவிர, ஒரு சிறிதும் அதிருப்தி அடையவில்லை. அன்றியும், எமது விருப்பத்தை நிறைவேற்ற அநேக நண்பர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதும் எனக்குத் தெரியும். 250 சந்தாதாரர்களை ஏற்படுத்திக் கொடுத்தும் இனியும் இருநூற்றைம்பது சந்தாதாரர்களை ஒரு மாதத்தில் சேர்ப்பதாய் வாக்களித்த சிங்கப்பூர் நண்பர்களுக்கும், மற்றும் 250 சந்தாதாரர்களை எதிர்பார்க்கும் மலேயா நண்பர்களுக்கும் எனது மன மார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். தமிழ்நாட்டிலும், ஊர்கள் தோறும் “குடி அரசின்” வளர்ச்சியையும் பரவுதலையும் எம்மைவிட அதிக கவலை கொண்டு எதிர்பார்க்கும் நண்பர்கள் பலர் இருக்கிறார்கள், என்பதும் எனக்குத் தெரியும். அவர்கள் “குடி அரசு”க்காக உழைத்து வந்ததற்கும், சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுத்ததற்காகவும் “குடி அரசு”க் கொள்கைகளைப் பரப்பப் பாடுபட்டதற்கும், நான் மனப்பூர்வமாய் நன்றி செலுத்துகிறேன். “குடி அரசு”க்கு இரண்டாவது வருடத்தில் நஷ்டமில்லை. முதல் வருடத்தின் நஷ்டம் அடைபட வேண்டும். ஆனால் இன்னமும் கொஞ்சம் நல்ல இதழில் இன்னும் நாலு பக்கம் அதிகப்படுத்த வேண்டும் என்கிற ஆவல் இருந்து வருகிறது. இக் காரியங்களுக்கு இப்போது ஆகும் செலவை விட இன்னமும் வருஷம் ஒன்றுக்கு 2000 ரூ. அதிகமாகச் செலவு பிடிக்கும். இனியும் கொஞ்சம் சந்தாதாரர்கள் அதிகமானால் இவைகளைச் செய்ய சௌகரியமாயிருக்கும். இவ்வருஷம் புதிதாகச் சொல்வதற்கு ஒன்றும் அதிகமாய் இல்லை என்றே நினைக்கிறேன்.



இமயமலை வெய்யிலில் காய்கிறது என்று குடை பிடிப்பது போல் இருக்கிறது என்பதாக நினைத்து விலகி விடலாமா என்று யோசிப்பதுமுண்டு. ஆனால் விலகுவதில் தான் என்ன லாபம்? ஏறக்குறைய நமது ஆயுள் காலமும் தீர்ந்துவிட்டது. இனி நாலோ அய்ந்தோ அல்லது அதிகமாயிருந்தால் பத்து வயது காலமோ இருக்கலாம். இந்த கொஞ்ச காலத்தை ஏன் நமது மனச் சாட்சிக்கு விட்டு விடக் கூடாது? விலகித்தான் என்ன பெரிய காரியம் செய்யப் போகிறோம்? என்பதாக கருதி மறுபடியும் இதிலேயே உழன்று கொண்டிருக்கிறோமே அல்லாமல் வேறில்லை.

பொதுவாக நமது பிரசங்கத்தினாலும் “குடிஅரசி”னாலும் நான் செய்து வந்த பிரசாரத்தில் அரசியல் இயக்கங்கள் என்பவைகளைக் கண்டித்தேன், அரசியல் தலைவர்கள் என்பவர்களைக் கண்டித்தேன், மதம் என்பதைக் கண்டித்தேன், மதத்தலைவர்கள் என்பவர்களைக் கண்டித்தேன், மதச்சடங்கு என்பவைகளைக் கண்டித்திருக்கிறேன்; குருக்கள் என்பவர்களைக் கண்டித்திருக்கிறேன்; கோவில் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; சாமி என்பதைக் கண்டித்திருக்கிறேன்; வேதம் என்று சொல்வதைக் கண்டித்திருக்கிறேன்; சாஸ்திரம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; புராணம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; பார்ப்பனீயம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; ஜாதி என்பதைக் கண்டித்திருக்கிறேன்; அரசாங்கம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; உத்தியோகம் என்பவைகளைக் கண்டித்திருக்கிறேன்; நீதி ஸ்தலம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; நியாயாதிபதி என்பவர்களைக் கண்டித்திருக்கிறேன்; நிர்வாக ஸ்தலங்கள் என்பவைகளைக் கண்டித்திருக்கிறேன்; ஜனப் பிரதிநிதித்துவம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; பிரதிநிதிகள் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; தேர்தல் என்பதைக் கண்டித்திருக்கிறேன்;

கல்வி என்பதைக் கண்டித்திருக்கிறேன்; சுயராஜ்யம் என்பதைக் கண்டித்திருக்கிறேன்; ஸ்ரீமான்கள் கல்யாணசுந்தர முதலியார், வரதராஜுலு நாயுடு, சி. ராஜகோபாலாச்சாரியார் முதலிய ஒரே துறையில் வேலை செய்து வந்த நண்பர்களைக் கண்டித்திருக்கிறேன்; இன்னும் என்னென்னவற்றையோ யார் யாரையோ கண்டித்திருக்கிறேன், கோபம் வரும்படி வைதும் இருக்கிறேன்; எதைக் கண்டித்திருக்கிறேன், எதைக்கண்டிக்கவில்லை என்பது எனக்கு ஞாபகத்திற்கு வரமாட்டேன் என்கிறது. இன்னமும் ஏதாவது எழுதலாம் என்று பேனாவை எடுத்தாலும், பேசலாம் என்று வாயைத் திறந்தாலும் கண்டிக்கவும் வையவும் துக்கப்படவுமான நிலைமை ஏற்படுகிறதே ஒழிய வேறில்லை. கண்டிக்கத்தகாத, வையத்தகாத இயக்கமோ, திட்டமோ, அபிப்பிராயமோ என் கண்களுக்குப் படமாட்டேன் என்கிறது. இவைகளன்றி எனது வார்த்தைகளும், எழுத்துகளும், செய்கைகளும் தேசத் துரோகமென்றும், வகுப்புத் துவேஷமென்றும், பிராமணத் துவேசமென்றும், மான நஷ்டமென்றும், அவதூறு என்றும், ராஜதுரோகம் என்றும், ராஜத் துவேஷமென்றும், நாஸ்திகமென்றும், மத தூஷணை என்றும், சிலர் சொல்லவும் ஆத்திரப் படவும் ஆளானேன். அரசியல் தலைவர்கள், தேசாபிமானிகள், தேசபக்தர்கள் என்பவர்கள் என்னை வையவும் என்னை தண்டித்து ஜெயிலில் வைக்கும்படி அரசாங்கத்தைக் கெஞ்சவும் ஆளானேன். இந்த இன்பமற்ற காரியங்களை நான் ஏன் செய்ய வேண்டும்? சிலருக்காவது மன வருத்தத்தையும், அதிருப்தியையும் கொடுக்கத்தக்க காரியத்தை ஏன் செய்ய வேண்டும்? என்று நானே யோசிப்பதுண்டு. சிற்சில சமயங்களில் யாரோ எப்படியோ போகட்டும், நாம் ஏன் இக்கவலையும் இவ்வளவு தொல்லையும் அடையவேண்டும்? நமக்கென்ன இதனால் ஜீவனமா? பணம், புகழ், கீர்த்தி, சம்பாதனையா? ஏன் நமக்கு இத்தனை எதிரிகள்? ஒரு பத்திரிகையாவது உதவியுண்டா? ஒரு தலைவராவது உதவியுண்டா? ஒரு தேச பக்தராவது உதவியுண்டா? இமயமலை வெய்யிலில் காய்கிறது என்று குடை பிடிப்பது போல் இருக்கிறது என்பதாக நினைத்து விலகி விடலாமா என்று யோசிப்பதுமுண்டு. ஆனால் விலகுவதில் தான் என்ன லாபம்? ஏறக்குறைய நமது ஆயுள் காலமும் தீர்ந்துவிட்டது. இனி நாலோ அய்ந்தோ அல்லது அதிகமாயிருந்தால் பத்து வயது காலமோ இருக்கலாம். இந்த கொஞ்ச காலத்தை ஏன் நமது மன சாட்சிக்கு விட்டு விடக் கூடாது? விலகித்தான் என்ன பெரிய காரியம் செய்யப் போகிறோம்? என்பதாகக் கருதி மறுபடியும் இதிலேயே உழன்று கொண்டிருக்கிறோமே அல்லாமல் வேறில்லை. உண்மையில் நாம் முன் சொன்ன அரசியல் மத விஷயம் முதலியதுகளைக் கண்டிக்க நேரிட்டபோது உண்மையான அரசியல் மத இயல் இவைகளை நாம் கண்டிக் கவே இல்லை. எதைப் பார்த்தாலும் புரட்டும், பித்தலாட்டமும் பெயரைப் பார்த்து ஏமாறத் தகுந்ததாயிருக்கிறதே அல்லாமல் தத்துவங்கள் எல்லாம் நமக்கும் நமது நாட்டுக்கும் ஆபத்தை விளைவிக்கக் கூடியதாகவும் கொஞ்சங் கூட ரிபேர் செய்வதற்கில்லாமல் அடியோடு அழித்து மறுபடியும் புதிதாய் உண்டாக்க வேண்டியதாகவே இருக்கிறது. நமது காலத்தில் இவை திருத்தப்பாடடையும் என்கின்ற நம்பிக்கை கொஞ்சமும் இல்லா விட்டாலும் வேறு யாராவது மகாத்மாவைப் போன்ற மகான்கள் வந்தால் அவர்களுக்கு பக்குவம் செய்து வைத்திருக்கக் கூடாதா என்றும், அதுவும் முடியாவிட்டால் பலன் எப்படி யானாலும் கடமையைச் செய்ய வேண்டியதுதானே என்கிற முடிவும் கிடைக்கிறது. ஆகவே, இக்கஷ்டமானதும், மனதுக்கு இன்பத்தைக் கொடுக்கக்கூடுமானதுமான இக்காரியத்தில் இறங்கிவிட்டோம். உலகம் ஒப்புக் கொண்டாலும் சரி தள்ளிவிட்டாலும் சரி நமக்கு அதைப்பற்றி கவலையில்லை. நமது கடமையை எப்படி நாம் பிரதானமாய்க் கருதி இறங்கி இருக்கிறோமோ அது போலவே பொது ஜனங்களும், அதாவது இக்கடமையைச் சரி என்று எண்ணியவர்கள் தங்கள் தங்களது கடமையையும் எண்ணி அக்கடமையைச் செலுத்துவார்கள் என்று நம்புகிறோம்.

(குடிஅரசு, தலையங்கம் – 01.05.1927)

date of publication - every thursday tamil weekly  Reg.No.tn/cc(S)Dn/459/22-24  licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# ஒன்றிய அரசுக்கு எதிராகக் கழகம் போர் முழக்கம்

**கோவை:** மாநில உரிமையைக் காப்போம்! கல்வி உரிமையை மீட்போம்! என்ற முழக்கத்துடன் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தடை செய்ய நினைக்கிற - பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து 12.9.2024 அன்று கோவை உக்கடம் வள்ளியம்மை பேக்கரி அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




இதற்கு மாநகர அமைப்பாளர் கிருஷ்ணன் தலைமை தாங்கினார். மாநகரச் செயலாளர் வெங்கட் வரவேற்புரையாற்றினார்.

கழகத் தலைமைக்குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், கோவை மாவட்டத் தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர் நவீன், திமுக மாணவரணிப் பொறுப்பாளர் மதிவாணன், மக்கள் அதிகாரம் பொறுப்பாளர் மூர்த்தி, பெண்ணிய செயற்பாட்டாளர் லோகநாயகி, மாநகரத் தலைவர் நிர்மல்குமார், CPIML ரெட்ஸ்டார் இனியவன், புரட்சிகர இளைஞர் முன்னணிப் பொறுப்பாளர் மலரவன் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

நிறைவாக மாவட்ட அமைப்பாளர் சூலூர் தமிழ்ச்செல்வி நன்றி கூறினார்.

முன்னதாக மறைந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் சீத்தாராம் யெச்சூரிக்கு புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது.

இதில் மாவட்டக் கழகத் தலைவர் இராமச்சந்திரன், மாதவன், பொங்கலூர் கார்த்தி, இரத்தினபுரி சதீஷ், கிணத்துக்கடவு இராமகிருஷ்ணன், மேட்டுப்பாளையம் அமுல்ராஜ், நிலவழகன், தி.மு.க அருண், செல்வராஜ், ஆதித்தமிழர் பேரவை பிரபாகரன், வி.சி.க சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**திருப்பூர் :** மாநில உரிமையைக் காப்போம்! கல்வி உரிமையை மீட்போம்! என்ற முழக்கத்துடன் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தடை செய்ய நினைக்கிற - பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து 12.9.2024 அன்று திருப்பூர் மாநகராட்சி அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




ஆர்ப்பாட்டத்திற்குக் கழகப் பொருளாளர் சு.துரைசாமி தலைமை தாங்கினார். மாநகரத் தலைவர் தனபால், மாநகர அமைப்பாளர் சரசுவதி, வடக்கு ஒன்றிய அமைப்பாளர் அய்யப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி திருப்பூர் மாவட்டச் செயலாளர் எஸ்.இரவிச்சந்திரன், ம.தி.மு.க தலைமைச் செயற்குழு உறுப்பினர் சக்திவேல், வி.சி.க துரைவளவன், ஆதித்தமிழர் பேரவை விடுதலைச் செல்வன், பு.இ.மு தமிழ் அமுதன், நவீன மனிதர்கள் பாரதி சுப்பராயன், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் வீ.சிவகாமி, கழக சமூகவலைதளப் பொறுப்பாளர் துரை.பரிமளராசன் ஆகியோர் கண்டனவுரையாற்றினார்கள்.

இதில் ம.தி.மு.க மாவட்டச் செயலாளர் ஆர்.நாகராசு, கழக திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில் இராசு, மாவட்ட அமைப்பாளர் வீ.சங்கீதா, மாவட்டப் பொருளாளர் இரவி, மாநகரச் செயலாளர் சி.மாதவன், திருப்பூர் தெற்கு பகுதிச் செயலாளர் மா.இராமசாமி, மாநகர அமைப்பாளர் முத்து, பல்லடம் நகர அமைப்பாளர் கோவிந்தராசு, மடத்துக்குளம் ஒன்றியத் தலைவர் கணக்கன், ஒன்றியச் செயலாளர் சிவானந்தம், பல்லடம் பழனிச்சாமி. முத்துலட்சுமி, கோமதி, சிரிஜா, வசந்தி, நஜ்முனிசா, கார்த்திக், கதிர் முகிலன், ராஜ்குமார், பிரபாகரன், ரமேசு, தமிழ்நாடு மாணவர் கழக மாவட்டச் செயலாளர் சி.இரா.கனல்மதி, பல்லடம் கௌதம், பெரியாயிபாளையம் அபிமன்யு, யாழினி யாழிசை, பெரியார் விழுதுகள் வெற்றிமாறன், தழல்சிறகன், மகிழ் மாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாநகரத் துணைத் தலைவர் கரு.மாரிமுத்து நன்றி கூறினார்.

**கள்ளக்குறிச்சி :** மாநில உரிமையைக் காப்போம்! கல்வி உரிமையை மீட்போம்! என்ற முழக்கத்துடன் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தடை செய்ய நினைக்கிற - பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் 10.9.2024 அன்று ரிஷிவந்தியம் வாணாபுரம் பகண்டை கூட்டுச் சாலையில் நடைபெற்றது.



ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் சாமிதுரை தலைமை தாங்கினார். தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் முருகன், ஒன்றிய அமைப்பாளர் கார்மேகம், நாகராஜ், ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கழகத் தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார் கண்டனவுரையாற்றினார்.

இதில் மதியழகன், ராமர், பெரியார் வெங்கட், வெற்றிவேல் உள்ளிட்ட நிர்வாகிகள், தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். நிறைவாக ஒன்றியத் தலைவர் குமார் நன்றி கூறினார்.

**ஈரோடு:** மாநில உரிமையைக் காப்போம்! கல்வி உரிமையை மீட்போம்! என்ற முழக்கத்துடன் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தடை செய்ய நினைக்கிற - பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் 11.9.2024 அன்று ஈரோடு சூரம்பட்டியில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்குக் கழக அமைப்புச் செயலாளர் ப.இரத்தினசாமி தலைமை தாங்கினார்.

இதில் கழக வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன், திராவிடர் கழக அமைப்புச் செயலாளர் சண்முகம், அருந்ததியர் முன்னேற்றப் பேரவை சாமிநாதன், தலித் விடுதலைக் கட்சி பொன்.சுந்தரம், கொங்கு விடுதலைப்புலிகள் கட்சி விஸ்வநாதன், நீரோடை நிலவன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை சரவணன், திராவிடர் விடுதலைக் கழக வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திகஜோதி, நம்பியூர் ரமேஷ், தெற்கு மாவட்டத் தலைவர் செல்வராஜ், மாவட்டத் துணைச் செயலாளர் செந்தில் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.




நிறைவாகக் கழக வடக்கு மாவட்டச் செயலாளர் செல்வகுமார் நன்றி கூறினார். இதில் திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தோழர்கள் பிரபாகரன், நவீன், கொ.வி.பு.க தோழர் கோபி, சிவகிரி பிரபு, திராவிடர் விடுதலைக் கழக வடக்கு மாவட்டத் தோழர்கள் ஈஸ்வரமூர்த்தி, தயாநிதி, அருளானந்தம், புலவன்சிறை நடராஜ், மயில்சாமி. தெற்கு மாவட்ட தோழர்கள் எழிலன், கிருஷ்ணன், கிருஷ்ணமூர்த்தி, குமார், திருமுருகன், சத்தியமூர்த்தி, நல்லதம்பி உள்ளிட்டத் தோழர்கள் கலந்துகொண்டனர்.

**நாமக்கல் :** மாநில உரிமையைக் காப்போம்! கல்வி உரிமையை மீட்போம்! என்ற முழக்கத்துடன் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தடை செய்ய நினைக்கிற - பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் 10.9.2024 அன்று பள்ளிபாளையத்தில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




இதில் நாமக்கல் மாவட்டத் தலைவர் சாமிநாதன், மாவட்டச் செயலாளர் சரவணன், அமைப்பாளர் முத்துப்பாண்டி, மற்றும் ஆதித்தமிழர் பேரவை, CPM, புரட்சிகர இளைஞர் முன்னணி உள்ளிட்டத் தோழமை இயக்கத்தினர் பங்கேற்றுக் கண்டனவுரையாற்றினார்கள்.

**மயிலாடுதுறை :** மாநில உரிமையைக் காப்போம்! கல்வி உரிமையை மீட்போம்! என்ற முழக்கத்துடன் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தடை செய்ய நினைக்கிற - பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் 10.9.2024 அன்று மயிலாடுதுறை கிட்டப்பா அங்காடி அருகில் நடைபெற்றது.




ஆர்ப்பாட்டத்திற்குக் கழக மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் தெ.மகேஷ் தலைமை தாங்கினார். தமிழ் மண் தன்னுரிமை இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் த.செயராமன் மற்றும் தோழமை இயக்கத்தினர் பங்கேற்று கண்டன உரையாற்றினார்கள்.

**காஞ்சிபுரம் :** மாநில உரிமையைக் காப்போம்! கல்வி உரிமையை மீட்போம்! என்ற முழக்கத்துடன் தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியைத் தடை செய்ய நினைக்கிற - பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் 10.9.2024 அன்று நடைபெற்றது.



ஆர்ப்பாட்டத்திற்குக் கழக காஞ்சி மாவட்ட அமைப்பாளர் கா.ரவி பாரதி தலைமை தாங்கினார். ராமஜெயம், ஏழுமலை, அருண் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ் உரிமை கூட்டமைப்பு காஞ்சி அமுதன், தி.மு.க தாண்டவ மூர்த்தி, தி.க அவெ.முரளி, காஞ்சி மக்கள் மன்றம் தஞ்சை தமிழன், ம.தி.மு.க, மகேஷ், காஞ்சிக் கலைக்குழு உலக ஒளி, ம.ம.க தாஜுதீன், தன்னாட்சித் தமிழகம் பழநி, சீதாவரம் உழவர் மோகன், பி.யூ.சி.எல் பாரதி விஜயன், தி.மு.க லெனின் ஆகியோர் கண்டனவுரையாற்றினார்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP Posted : September 20, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran